بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 42

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

08 ஸஃபர் 1440 ஹிஜ்ரி கமரி 18 அஹா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
18 அக்டோபர் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا
كُلُوۡا مِنۡ طَيِّبٰتِ مَا رَزَقۡنٰكُمۡ
وَاشۡكُرُوۡا لِلّٰهِ اِنۡ كُنۡتُمۡ اِيَّاهُ تَعۡبُدُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையான பொருள்களிலிருந்து உண்ணுங்கள். நீங்கள் (உண்மையில்) அல்லாஹ்வைத்தான் வணங்குகின்றீர்களென்றால், அவனுக்கு நன்றி பாராட்டுங்கள். (2:173)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**திருக்குர்ஆன் ஆழிய ஞானங்களையும் இறைஞானங்களையும் தன்னகத்தே கொண்டது. மேலும் நன்மை, தீமையைப் பிரித்தறியக்கூடிய எத்தகைய அந்தஸ்தைக் கொண்டுள்ளது என்றால் வீணான எந்தவொரு விஷயத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை**

**திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு வேதம் என்றால் அதில் அனைத்து விதமான ஞானங்களும் இரகசியங்களும் அடங்கியுள்ளன**

---

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

### திருக்குர்ஆனின் ஒருங்கிணைப்பு

திருக்குர்ஆன் நுட்பமான இறைஞானங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் நன்மை, தீமையைப் பிரித்தறியக்கூடிய எத்தகைய அந்தஸ்தை கொண்டுள்ளது என்றால் வீணான எந்தவொரு விஷயத்தையும் தன்னகத்தே கொண்டிக்கவில்லை. ஒவ்வொரு விஷயங்களின் விளக்கத்தையும் சுயமே செய்கிறது. மேலும் அனைத்து விதமான தேவைகளின் பொருளும் அதனுள் இருக்கிறது.

அது எல்லாத் தரப்பிலும் ஒரு அடையாளமாகவும், அத்தாட்சியாகவும் இருக்கிறது. எவராவது இந்த விஷயங்களை மறுப்பார் என்றால் நாம் அவருக்கு எல்லாத் தரப்பிலிருந்தம் திருக்குர்ஆனின் அற்புதத்தன்மையை நிரூபித்துக் காட்டத் தயாராக உள்ளோம். இன்றைய நாட்களில் ஏகத்துவம் மற்றும் இறை இருப்பின் மீது மிகவும் வலுவான தாக்குதல் தொடுக்கப்படுகின்றது. கிறித்தவர்களும் நிறைய அழுத்தம் கொடுத்தார்கள். எழுத்து வடிவிலும் திருக்குர்ஆனுக்கு எதிராக எழுதினார்கள்.

ஆனால் அவர்கள் (கிறித்தவர்கள்) எதைக் கூறினார்களோ மேலும் எதை எழுதினார்களோ அவை அனைத்தும் இஸ்லாத்தின் இறைவன் தொடர்பாகவே எழுதினார்கள். ஒரு மரணித்த சிலுவையில் அறையப்பட்ட இறைவன் தொடர்பாக அல்ல. எவர் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இருப்பு மற்றும் தோற்றத்தின் மீது பேனாவை எடுப்பாரோ அவர் இறுதியில் அந்த இறைவனின் பக்கமே திரும்பி வர வேண்டியதுள்ளது. இஸ்லாம் போதிக்கின்ற அந்த இறைவனின் பக்கமே திரும்பி வர வேண்டியுள்ளது என்பதை நான் வாதித்துக் கூறுகிறேன். ஏனென்றால் இயற்கை வேதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அந்த இறைவனின் முகவரியைக் காண முடிகிறது.

மேலும் மனிதன் இயல்பிலேயே அந்த இறைவனின் தோற்றத்தை தான் தன்னகத்தே வைத்துள்ளான். ஆக அப்படிப்பட்ட மனிதனின் பாதம் எழும்போது இஸ்லாத்தை நோக்கி தான் எழும். இதுவும் ஒரு மகத்தான அற்புதத்தின் அடையாளமாகும்.

### திருக்குர்ஆனின் அறைகூவல்

எவராவது திருக்குர்ஆனின் இந்த அற்புதங்களை நிராகரிப்பார் என்றால் ஒரேயொரு விஷயத்தைக் கொண்டே சோதித்துப் பாருங்கள். அதாவது எவர் திருக்குர்ஆனை இறைவேதம் என்று நம்பவில்லையோ, இந்த அறிவியல் காலகட்டத்தில் அவ்வாறு வாதிப்பவர் எல்லாம் வல்ல இறைவனின் இருப்பின் தொடர்பாக சான்றை எழுதவும் அதற்கெதிராக அந்த அனைத்து சான்றையும் திருக்குர்ஆனிலிருந்தே நாம் எடுத்து வைப்போம்.

அதே போல் அவர் ஏக இறைவனின் ஓரிறைக் கொள்கை தொடர்பாக சான்றை எழுதினார் என்றால் நாமும் அந்த அனைத்து சான்றுகளையும் திருக்குர்ஆனிலிருந்தே எடுத்துக் காட்டுவோம். மேலும் அவர் திருக்குர்ஆனில் இல்லாத விஷயங்கள் என்று வாதம் செய்து அதற்கான சான்றை எழுதட்டும் அல்லது திருக்குர்ஆன் போதிக்கின்ற உண்மைத்துவம் மற்றும் தூய போதனைகள் தொடர்பாக எதை தன்னுடைய சிந்தனையின் மூலம் திருக்குர்ஆனில் இல்லை என்று எண்ணுகிறாரோ அப்படிப்பட்ட விஷயங்களைச் சான்றுகளுடன் எழுதட்டும்.

அப்படி எழுதக்கூடிய நபருக்கு திருக்குர்ஆனின் இந்த தெளிவான சான்றை فِيۡهَا كُتُبٌ قَيِّمَةٌ அதாவது இதில் நிலைத்து நிற்கும் கட்டளைகள் உள்ளன (98:4) என்ற தெளிவான சான்றை எடுத்துக் காட்டுவோம்.

பாருங்கள்! எவ்வளவு உண்மையான மற்றும் தெளிவான சான்றாக உள்ளது. அல்லது உண்மை மற்றும் இயல்பான சான்றுகளை எழுதினால் நாம் அனைத்து கோணங்களிலிருந்தும் திருக்குர்ஆனின் அற்புதத்தை நிரூபித்துக் காட்டுவோம். அதுமட்டுமல்லாமல் அனைத்து உண்மைத்துவம் மற்றும் தூய போதனைகள் திருக்குர்ஆனில் அடங்கியுள்ளன எனக் கூறுவோம்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**கடந்த நாட்களில் அல்லாஹ் ஜெர்மனி மற்றும் பெல்ஜியத்தின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கினான். இரண்டு மாநாடுகளும் அல்லாஹ்வின் அருளால் மிகவும் அருளுக்குரியதாக இருந்தன**

**ஜெர்மனி ஜமாஅத்தில் தற்போது ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகள் மிகப்பரந்த அளவில் வலுவானதாக ஆகிவிட்டது. வெளியிலிருந்தும் அதிகமான விருந்தினர்கள் அங்கு வருகின்றனர். அக்கம் பக்கத்திலுள்ள ஐரோப்பாவின் மேற்கத்திய பகுதிகள் மட்டுமின்றி மற்ற நாடுகளிலிருந்தும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மக்கள் வருகின்றனர். இந்த ஆண்டு ஆப்ரிக்கா நாட்டைச் சார்ந்தவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். அல்லாஹ்வின் அருளால் வழக்கத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டு மாநாட்டிலும் ஏற்படுவதைப் போன்று வெளியிலிருந்து வந்த விருந்தினர்கள் நமது ஆண்டு மாநாட்டைப் பற்றி ஒரு சிறந்த தாக்கத்தை எடுத்துரைக்கின்றனர். மேலும் அதை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் இதனை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஜமாஅத்தைப் பற்றிய தமது நல்ல மற்றும் சிறந்த தாக்கத்தை அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்**

**ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மற்றும் விருந்தினர்களின் நல்ல தாக்கங்கள் பற்றிய நற்குறிப்பு மற்றும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு முக்கிய வழிகாட்டல்**

**இன்றிலிருந்து U.K வில் குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமா ஆரம்பமாகின்றது. இதன் அடிப்படையில் நான் சில விஷயங்களை இது தொடர்பாக நினைவூட்டிக் கொள்கின்றேன். அவர்கள் தமது நிலைமைகளை தமது சுற்றுப் புறத்தில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்களது இஜ்திமாவையும் அருளுக்குரியதாக ஆக்குவானாக**

**ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆகிய இரண்டு மாநாடுகளில் பணியாற்றியவர்களுக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்கள் தமது சக்திக்குட்பட்டவாறு மாநாட்டில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்குத் தொண்டாற்றினார்கள். அவ்வாறே மாநாட்டில் கலந்து கொண்ட அஹ்மதிகளும் இவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்**

**இந்த அடிப்படையில் தொண்டாற்றக் கூடியவர்கள் நன்றி கூறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்குத் தொண்டாற்றுவதற்கான பாக்கியத்தை வழங்கினான். வருங்காலத்திற்காக ஆயத்தம் செய்யும். எந்த குறைகள் மற்றும் பலவீனங்கள் இருந்ததோ அதைப் பற்றிச் சிந்தித்து வருங்காலங்களில் அவற்றை எவ்வாறு சிறந்ததாக ஆக்க முடியும் என்று பார்க்க வேண்டும்**

**நான் சில விருந்தினர்களின் தாக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அதிலிருந்து ஆண்டு மாநாட்டின் அருளினால் அஹ்மதிகள் மீது மட்டும் தாக்கம் ஏற்படுவதில்லை. மாறாக, அந்நியர்கள் மீதும் தாக்கம் ஏற்படுகின்றது என்பது தெரிய வருகின்றது**

**கனடாவைச் சார்ந்த சய்யிது ஹஸ்னாத் அஹ்மது சாஹிப், ஹாலேன்ட் மற்றும் இந்தோநேஷியாவின் முன்னால் முபல்லிக் ஹாபிஸ் குத்ரதுல்லாஹ் சாஹிப் அவர்களது மனைவியான முபாரக்கா ஷவ்கத் சாஹிபா மற்றும் ஆஸ்திரேலியாவின் நாயிப் அமீர் சவுத்ரி காலித் சைஃபுல்லாஹ் சாஹிப் ஆகிய மூன்று நபர்களது நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையையும் ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 21 செப்டம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த நாட்களில் அல்லாஹ் ஜெர்மனி மற்றும் பெல்ஜியத்தின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கினான். M.T.A பார்க்கக் கூடியவர்கள் கண்டிருப்பார்கள். நீங்களும் பார்த்திருப்பீர்கள். இரண்டு மாநாடுகளும் அல்லாஹ்வின் அருளால் மிகவும் அருளுக்குரியதாக இருந்தன. ஜெர்மனி ஜமாஅத் பெரிய ஜமாஅத்தாகும். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் பல வருடங்களாக ஜெர்மனி ஆண்டு மாநாட்டில்

கலந்து கொண்டு வந்துள்ளார்கள். பிறகு நானும் அதில் கலந்து கொள்கின்றேன். இந்த அடிப்படையில் ஜெர்மனி ஜமாஅத்தில் தற்போது ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகள் மிகப்பரந்த அளவில் வலுவானதாக ஆகிவிட்டன.

வெளியிலிருந்தும் அதிகமான விருந்தினர்கள் அங்கு வருகின்றனர். அக்கம் பக்கத்திலுள்ள ஐரோப்பாவின் மேற்கத்திய பகுதிகள் மட்டுமின்றி மற்ற நாடுகளிலிருந்தும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மக்கள் வருகின்றனர். இந்த ஆண்டு ஆப்ரிக்கா நாட்டைச் சார்ந்தவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். அல்லாஹ்வின் அருளால் வழக்கத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டு மாநாட்டிலும் ஏற்படுவதைப் போன்று வெளியிலிருந்து வந்த விருந்தினர்கள் நமது ஆண்டு மாநாட்டைப் பற்றி ஒரு சிறந்த தாக்கத்தை எடுத்துரைக்கின்றனர். மேலும் அதை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் இதனை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஜமாஅத்தைப் பற்றிய தமது நல்ல மற்றும் சிறந்த தாக்கத்தை அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

சிலர் இதற்கு முன்பும் வந்துள்ளனர். மீண்டும் வருகை தந்துள்ளார்கள். அவர்கள் ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகள் மற்றும் அதன் சூழல்களைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அதாவது உங்களது ஆண்டு மாநாட்டின் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான போதனை என்ன? என்றும் இஸ்லாம் தொடர்பாக மீடியா எடுத்துக் கூறுகின்ற மிகவும் அபாயகரமான பிம்பமானது இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் மற்றும் ஓர் உண்மையான முஸ்லிமின் நடைமுறை இதற்கு முற்றிலும் மாற்றமானது என்றும் தெரிய வந்துள்ளது என்பது எங்களுக்கு தெரிய வந்துள்ளது.

இவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு பணியாற்றக்கூடிய, அதிகாரியாக இருக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியையும் இவர்களது நடைமுறை எவ்வாறிருக்கின்றது? என்று மிகவும் உன்னிப்புடன் கவனிக்கின்றனர். போதனை சிறந்ததாக இருந்தாலும் அந்த போதனையைப் பின்பற்றக் கூடியவர்கள் அதன்படி செயல்படவில்லை என்றால் பிறகு அந்த போதனையின் சிறந்த தாக்கம் ஏற்பட முடியாது.

நான் இதற்கு முன்பும் கூறியிருக்கிறேன். இந்த அடிப்படையில் மாநாட்டில் பணியாற்றக்கூடிய மற்றும் கலந்து கொள்கின்ற அனைவரும் அமைதியாகப் பிரச்சாரம் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர். முஸ்லிம் அல்லாதவரது சிந்தனையிலிருந்து இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்களை அகற்றக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் முஸ்லிம்களின் உள்ளங்களில் பெயர்தாங்கிய ஆலிம்கள் மூலமாக ஏற்பட்டுள்ள தவறான எண்ணங்களை அகற்றக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

அஹ்மதிகள் முஸ்லிம்கள் கிடையாது. அவர்கள் கலிமா கூறுவதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதி நபியாக ஏற்றுக் கொள்வதில்லை. காத்தமுன் நபிய்யீன் என்று அன்னாரை ஏற்றுக் கொள்வதில்லை என்று மக்கள் கூறுகின்றனர். மேலும் இவர்களது திருக்குர்ஆனே வேறு என்றும் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் முஸ்லிம்களில் பலருக்கு அஹ்மதிகளைச் சந்தித்ததாலும், ஆண்டு மாநாட்டின் சூழலைப் பார்த்ததனாலும் அவர்களது தவறான தாக்கங்கள் விலகி விட்டன. மேலும் ஜெர்மனிக்கு வருகை தந்த முஸ்லிம்கள் இதனை வெளிப்படுத்தவும் செய்துள்ளனர். அரபு நாட்டிலிருந்தும், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மற்ற நாடுகளிலிருந்தும் வருகை தந்தவர்கள் இதை வெளிப்படுத்தியுள்ளனர்.

அவ்வாறே மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் தொண்டாற்றக் கூடியவர்களின் பணியை புகழ்ந்தும் கூறியுள்ளார்கள். அவர்களது நடைமுறையைப் புகழ்ந்து கூறியுள்ளார்கள். பெல்ஜியம் ஆண்டு மாநாட்டிலும் இந்த அனைத்து விஷயங்களையும் பார்க்க முடிந்தது. அந்த ஆண்டு மாநாடும் மிகவும் அருளுக்குரிய மற்றும் வெற்றிக்குரிய மாநாடாக இருந்தது. நான் முன்பே எனது கடைசி சொற்பொழிவில் கூறியது போன்று சிறிய ஜமாஅத்தாக இருந்த போதிலும், மாநாட்டில் கலந்து கொண்ட அஹ்மதிகளை விட விருந்தினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் அவர்களும் இந்த எல்லா அனைத்து பணிகளையும் மிகவும் சிறந்த முறையில் செய்தார்கள்.

நான் 14 வருடங்களுக்குப் பிறகு அவர்களது மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். இந்த அடிப்படையில் அவர்களுக்கு அனுபவம் இல்லாததன் காரணமாக கவலையும், பதற்றமும் இருந்தது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் மிகவும் சிறந்த ஏற்பாட்டை செய்திருந்தனர். அங்கு வருகை தந்த முஸ்லிம் அல்லாதவர்கள் குறைவானவர்களாக இருந்தாலும் அவர்கள் மாநாட்டின் ஏற்பாடுகள் மற்றும் ஜமாஅத் செய்து வருகின்ற பணிகளை மிகவும் புகழ்ந்தார்கள்.

மேலும் ஜமாஅத் பணிகளையும், உலகத்தில் அமைதியை நிலைநாட்ட ஜமாஅத் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பொதுவாக புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

ஆக ஜமாஅத் எங்கு இருந்தாலும், எந்த இடத்தில் இருந்தாலும் அல்லாஹ்வின் அருளால் அன்னியர்களிடம் தமது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் தப்லீக்கிற்கான காரணியாக அமைகின்றது. எனவே ஜமாஅத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த பிறகு தமது நிலைமைகளை எந்த அளவுக்குச் சிறந்ததாக ஆக்க வேண்டியதிருக்கிறது என்ற விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

நமது ஒவ்வொரு இஜ்திமாவும், மாநாடும் அது எந்த இடத்தில் நடந்தாலும் சரி; அது ஒரு வியக்கத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது. இன்றிலிருந்து U.K வில் குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமா ஆரம்பமாகின்றது. இதன் அடிப்படையில் நான் சில விஷயங்களை இது தொடர்பாக நினைவூட்டிக் கொள்கின்றேன். அவர்கள் தமது நிலைமைகளைத் தமது சுற்றுப் புறத்தில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் அவர்களது இஜ்திமாவையும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் காலநிலையின் காரணமாக அவர்களிடம் சில பதற்றம் இருக்கின்றது. அல்லாஹ் அதனையும் அகற்றுவானாக. மேலும் காலநிலையைச் சிறந்ததாக ஆக்குவானாக.

ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆகிய இரண்டு மாநாடுகளில் பணியாற்றியவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்கள் தமது சக்திக்குட்பட்டவாறு மாநாட்டில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்குத் தொண்டாற்றினார்கள். அவ்வாறே மாநாட்டில் கலந்து கொண்ட அஹ்மதிகளும் இவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

பல்வேறு வகையான பிரிவைச் சார்ந்த மற்றும் இயல்பைக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தம்மைத்தாமே அர்ப்பணிக்கின்றனர்.

பெல்ஜியத்தில் பணியாற்றக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஆயினும் நான் கூறியது போன்று அவர்கள்

மிகவும் சிறந்த முறையில் பணிகளைச் செய்துள்ளனர். இந்த அடிப்படையில் தொண்டாற்றக் கூடியவர்கள் நன்றி கூறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு தொண்டாற்றுவதற்கான பாக்கியத்தை வழங்கினான். வருங்காலத்திற்காக ஆயத்தம் செய்யும். எந்த குறைகள் மற்றும் பலவீனங்கள் இருந்ததோ அதைப் பற்றி சிந்தித்து வருங்காலங்களில் அவற்றை எவ்வாறு சிறந்ததாக ஆக்க முடியும் என்று பார்க்க வேண்டும்.

குறிப்பாக ஏற்பாட்டாளர்களும், அதிகாரிகளும் இதைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். தாம் வகுத்த திட்டங்களை அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். எல்லா குறைபாடுகளையும் Red Book ல் எழுத வேண்டும். ஏனென்றால் மீண்டும் இந்த தவறுகள் நிகழ்ந்து விடக்கூடாது.

ஜெர்மனியில் பணியாற்றக்கூடியவர்கள் தொடர்பாக, அவர்களது முகத்தில் புன்சிரிப்பு காணப்படுவதில்லை. பணி செய்யும் போது புன்னகையை வெளிப்படுத்துவதில்லை. கடுமையாக அவர்கள் நடந்து கொள்வார்கள் என்ற புகார் வந்து கொண்டிருந்தது. ஆனால் இந்த முறை பொதுவாக அவர்களைப் பற்றி நல்ல அறிக்கையே கிடைத்துள்ளது. அவர்கள் வருங்காலங்களிலும் இதனைச் சிறந்ததாக ஆக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு தவறின் பக்கம் நான் கவனமூட்டிக் கொள்கின்றேன். அது என்னவென்றால், ஆண்கள் இருக்கக்கூடிய ஜலஸா கூடாரத்தில் ஒரு அமர்வில் ஒரு நஸ்ம் பாடப்பட்டது. மேரே கர் என்ற கவிதை தொடர்பாக அதனைப் படித்த விதம் தவறாகும். நமது மேடைகள் இந்த மாதிரி படிப்பதற்கு ஒரு டிராமா நடத்தக்கூடிய மேடை கிடையாது. நமது நடைமுறையை நாம் எப்போதும் நம்முன் வைக்க வேண்டும். நமது நடைமுறைக்கு மாற்றமாக இருக்கக்கூடிய நடைமுறையை நாம் ஒருபோதும் மேற்கொள்ளக் கூடாது.

மற்றொன்று, ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள், ஜலஸாவின் அமர்வில் படிக்கப்படுகின்ற நஸ்ம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நஸமாக இருக்க வேண்டும். அல்லது கலீஃபாக்களின் நஸமாக இருக்க வேண்டும். மற்ற நஸத்தை படிக்கக் கூடாது என்பதைக் குறிப்பாக எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். நான் ஆண்டு மாநாட்டின் அதிகாரிக்கும் இது தொடர்பாக கவனமூட்டி விட்டேன்.

இதற்குப் பிறகு நான் சில விருந்தினர்களின் தாக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அதிலிருந்து ஆண்டு மாநாட்டின் அருளினால் அஹ்மதிகள் மீது மட்டும் தாக்கம் ஏற்படுவதில்லை. மாறாக, அந்நியர்கள் மீதும் தாக்கம் ஏற்படுகின்றது என்பது தெரிய வருகின்றது.

போஸ்னியாவிலிருந்து ஒரு பள்ளிவாசலின் அஹ்மதியல்லாத இமாம் ஒருவர் வந்திருந்தார். ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டிற்கு முன்பாக அவர் ஒரு தப்லீக் அமர்வில், நானே அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். தனிப்பட்ட அறிவின் மூலமாக ஜமாஅத்தைப் பற்றி ஒரு சரியான வழியை நான் இதன் மூலம் நிலைநாட்ட முடியும் என்று கூறினார். இதன் விளைவாக அவருக்கு மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

சிறிது நேரம் கழிந்த பிறகு அவர்கள் கூறினார். அஹ்மதிகளோடு சிறிது நேரம் கழித்த பிறகு நான் இந்த முடிவை எட்டியுள்ளேன். அதாவது நீங்கள் தான் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் அடிப்படையில் தப்லீக்கைச் சரியான முறையில் செய்கின்றீர்கள்.

மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளையும் மிகவும் கவனமாக கேட்டார்கள். மாநாட்டிற்குப் பிறகு அவர்களுக்கும் அவர்களோடு வந்த குழுவினருக்கும் ஜெர்மனியிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவும் காட்டப்பட்டது.

ஜாமிஆவைப் பார்த்த பிறகு அவர் கூறினார்: வருத்தமாக இருக்கின்றது. முஸ்லிம்கள் மார்க்க மற்றும் உலகக் கல்வியில் மிகவும் பின்தங்கி இருக்கின்றார்கள். ஒருபுறம், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் உலகக் கல்வியில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் சான்றிதழை வழங்கினார்கள். மேலும் ஜமாஅத் மக்களுக்கு உலகக் கல்வியை கற்பது மற்றும் அதில் முன்னேறுவதன் பக்கம் வழிகாட்டிக் கொண்டிருப்பதை ஆண்டு மாநாட்டில் பார்த்தேன்.

மறுபுறம், ஜாமிஆவைப் பார்த்த பிறகு, அஹ்மதிய்யா ஜமாஅத் கிலாஃபத்தின் தலைமையின் கீழ் மார்க்கக் கல்வியைப் பரப்புவதன் பக்கம் எந்த அளவுக்கு முயற்சி செய்கின்றது என்பதும் மேலும் எந்த அளவுக்கு மிகவும் சிறப்பான முறையில் இதில் முன்னேறுகின்றது என்பதும் முஸ்லிம்கள் இழந்து விட்ட கண்ணியத்தை மீண்டும் நிலைநாட்ட முயற்சி செய்கின்றது என்பதும் எனக்குத் தெளிவாகி விட்டது.

இதற்குப் பிறகு அவர் என்னையும் சந்தித்தார். அவர் என்னிடம், நான் பராஹீனே அஹ்மதிய்யா மற்றும் தஸ்கிரா ஆகியவற்றைப் படிக்கின்றேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், பராஹீனே அஹ்மதிய்யா படிப்பதற்குப் பகரமாக இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் மற்றும் தஃவத்துல் அமீர் Invitation to Ahmadiyyat என்ற நூலைப் படியுங்கள். அதன் மூலமாக உங்களுக்கு ஜமாஅத்தைப் பற்றியும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் மற்றும் அன்னாரது நிலைகள், அன்னாருடைய ஞானங்கள் மற்றும் அல்லாஹ் அன்னாருக்கு எவ்வாறு உதவி புரிந்தான் என்று தெரிய வரும் என்று கூறினேன்.

பிறகு போஸ்னியாவிலிருந்து வந்திருந்த உம்ரா சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் முதல் முறையாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். மேலும் காலத்தின் கலீஃபாவைச் சந்தித்தேன். ஆண்டு மாநாடு எவ்வளவு விரைவாக முடிந்து விட்டது என்று தெரியவே இல்லை. இந்த நாட்கள் இன்னும் நீண்டதாக ஆகியிருக்கக் கூடாதா! எல்லா ஆண்டு மாநாடுகளிலும் கலந்து கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

பலவீனமான கண்பார்வை கொண்டவரான மோன்டி நேகரூ அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் பலவீனமான கண் பார்வை கொண்ட நபராவேன். ஆனால் நான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அனைத்தையும் என் உள்ளத்தின் கண்களால் கண்டேன். மாநாட்டின் மூலமாக உள்ளத்தை நிரப்பியவாறு திரும்பிச் செல்கின்றேன். நான் எந்த நாட்டை அல்லது இடத்தைச் சார்ந்தவனாக இருக்கின்றேனோ அங்குள்ள மக்கள் மார்க்கத்தை விட்டு வெகு தொலைவில் இருக்கின்றனர். ஆன்மீகம் என்றால் என்ன? என்பது தொடர்பாக எங்களுக்கு எதுவும் தெரியாது.

ஆனால் இறைவன் இருக்கின்றான். மேலும் அவனது அருட்கள் இங்கு சாந்தி, அமைதி மற்றும் மனதிற்கு நிம்மதி ஆகியவற்றின் மூலமாக இறங்குகின்றது என்பதை நான் மாநாட்டில் உணர்ந்தேன். அதிலிருந்து நானும் பயன் பெற்றேன்.

இந்த வருடம் ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் பல்காரியாவைச் சார்ந்த 56 நபர்கள் ஒரு குழுவாக வருகை தந்து கலந்து

கொண்டார்கள். இதில் 31 பேர் ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்களாவர். அவர்களையும் சந்தித்தேன்.

அவர்களில் கலந்து கொண்ட ஒரு பெண்மணி கிரில்கா (Kirilka) சாஹிபா தமது தாக்கத்தைக் கூறுகின்றார்கள்:

நான் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாட்டில் ஆன்மீகச் சூழல் இருந்தது. மிகவும் நிம்மதிகரமான சூழலாக இருந்தது. அது வாழ்க்கை எஞ்சியிருக்கும் வரையிலுள்ளதாக இருந்தது. மக்களது உள்ளங்களில் எங்கள் மீது கண்ணியமும், அன்பும் இருந்தது. எப்படிப்பட்ட நல்ல மக்களாக இருக்கின்றனர் என்பதை அவர்களது கண்கள் மூலமாக அவர்களது ஈமானின் தரத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது.

காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவு என் மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. சொற்பொழிவின் போது அழுது கொண்டிருந்தேன். எனது புது வாழ்க்கை ஆரம்பமாக இருப்பதைப் போன்று நான் உணர்ந்தேன். நான் எஞ்சியுள்ள வாழ்க்கையையும் இந்த கூற்றுகளின் ஒளியில் கழிக்க முயற்சி செய்வேன். இந்த ஆன்மீகச் சூழலிலிருந்து பயனடைவதற்கான வாய்ப்பை வழங்கிய உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மக்கள் அஹ்மதிய்யத்தைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் இந்த மக்கள் இங்கு வந்து இந்த சுற்றுச் சூழலிலிருந்து தாக்கத்தைப் பெறுகின்றனர். இவர்களுக்கும் இந்த மாநாடு அருளுக்குரியதாக ஆகி விடுகின்றது.

ஒரு கிறித்துவ பெண்மணி கிரேஸிமீரா (Kracimira) சாஹிபா கூறுகின்றார்கள்:

நான் எனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். நான் இப்படிப்பட்டதொரு விருந்து உபசரிப்பு செய்யக்கூடிய அமைப்பை இதற்கு முன்பு கண்டதேயில்லை. பெற்றோர்களுக்கு கண்ணியமளித்தல், குழந்தைகளின் தர்பிய்யத் தொடர்பாக பலற்றை கற்றுக் கொண்டேன். இப்போது அதனை எனது வாழ்நாளின் அங்கமாக ஆக்கிக் கொள்வேன்.

ஆண்கள் பெண்களுக்கு கண்ணியம் வழங்கியதைப் பார்த்து நான் மிகவும் வியப்படைந்தேன். கிறித்தவ மதத்தில் பெண்களுக்கு இப்படிப்பட்ட கண்ணியத்தையும் மதிப்பையும் நான் கண்டதில்லை. உங்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் உங்களுக்காக துஆவும் செய்கின்றேன்.

ஆக இது ஆண்களுக்கும் ஒரு பாடம் ஆகும். அதாவது அவர்கள் வெறும் ஆண்டு மாநாட்டின் நாட்களில் மட்டுமின்றி எப்போதும் அவர்களது உள்ளங்களில் பெண்கள் மீதான கண்ணியம் இருக்க வேண்டும். மேலும் அல்லாஹ் வழங்கியுள்ள போதனைகளுக்கேற்ப அது இருக்க வேண்டும்.

முஹம்மது யூசுஃப் என்ற ஒரு முஸ்லிம் நண்பர் மாநாட்டில் கலந்து கொண்டார். கூறுகின்றார்: நான் முதல் முறையாக மாநாட்டில் கலந்து கெண்டுள்ளேன். ஜமாஅத்திற்கு எதிராக நான் எந்த விஷயங்களை கேள்விப்பட்டுள்ளேனோ அவற்றிலிருந்து மாநாட்டின் சூழலானது எனது உள்ளத்தை முழுமையான முறையில் தூய்மையாக்கி விட்டது. எல்லா இடங்களிலும் நன்மை மற்றும் திருக்குர்ஆனின் போதனைகளே இருந்தது.

எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற முழக்கம் என்னை மிகுந்த தாக்கத்திற்குள்ளாக்கியது. எல்லா இடங்களிலும் அமைதியே நிலவியது. குறிப்பாக காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுக்கு இடையே மிகுந்த அமைதி கிடைத்தது. மாநாட்டின் சந்தர்ப்பத்திலேயே நானும் அஹ்மதியத்தில் இணைய வேண்டும் என்ற முடிவை எடுத்தேன். எனக்கு தனிப்பட்ட பல கஷ்டங்கள் இருந்தன. ஆனால் மாநாட்டில் நான் கலந்து கொண்ட பிறகு எனது கஷ்டங்கள் தானாகவே விலகியது. இப்போது நான் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை பரவச் செய்வேன்.

பிறகு லேட்வியாவிலிருந்து வருகை வந்த குழுவின் தாக்கங்கள். அங்கிருந்து ஒரு Medical Student வந்திருந்தார். அவர் கூறுகின்றார்:

ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டது எனக்கு கண்ணியத்தை கொடுக்கக்கூடிய விஷயமாகும். இந்த மாநாடானது, வலுவான நம்பிக்கையைக் கொண்ட, நிம்மதியடைந்த ஆன்மாவைக் கொண்ட, சகோதரத்துவத்தையும், அமைதியையும் விரும்பக்கூடிய மக்களின் இஜ்திமா ஆகும் என்று நான் உணர்ந்தேன்.

எவ்வாறு ஒவ்வொருவரும் தம்மையே மறந்து சொற்பொழிவுகளைக் கேட்பதிலும், தத்தமது பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள் என்ற விஷயம் எனக்கு மிகவும் வியப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். அவ்வாறே நான் காலத்தின் கலீஃபா அவர்களைச் சந்தித்ததும் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கண்ணியமாகும். ஹுஸூர் அவர்கள் ஜெர்மனி மக்களது உள்ளத்தில் இருக்கக்கூடிய முஹாஜிரீன்கள் மற்றும் இஸ்லாம் தொடர்பான அச்சத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

அஹ்மதிய்யா ஜமாஅத் உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும், சகோதரத்துவத்திற்கான தூதுச் செய்தியை வழங்குகின்றது என்றும் ஜெர்மனி சமூகத்தில் நட்பை பேணுவது மற்றும் தொண்டு செய்வது ஆகியவற்றின் பக்கம் வழியுறுத்துகிறது என்ற இந்த விஷயத்தைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

லேட்வியாவில் ஒரு பாகிஸ்தானைச் சார்ந்த ஒருவர் அவர் மாஸ்டர்ஸ் படிப்பை படித்துக் கொண்டிருக்கிறார். மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்:

நான் கடந்த மாதம் தான் Study Visa வைப் பெற்று பாகிஸ்தானிலிருந்து லேடுயா வந்தேன். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள எனக்கும் அழைப்புக் கொடுக்கப்பட்டது. நான் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு இதை ஏற்றுக் கொண்டேன். நான் மாநாட்டுத் திடலுக்கு சென்ற போது ஏற்பாட்டாளர்களைப் பார்த்து மிகவும் வியப்படைந்தேன். ஏனென்றால் அங்கு அதிகமான மக்கள் இருந்தனர். ஏற்பாட்டாளர்கள் மிகவும் சிறப்பாக அனைவரையும் சரி செய்து வந்தார்கள். மாநாட்டுத் திடலில் இருந்தவர்களில் பல்வேறு நாட்டைச் சார்ந்த முஸ்லிம் அல்லாத விருந்தினர்கள் இருந்தார்கள்.

அவர்கள் அனைவருக்கும், இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி அவர்கள் தாமே அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நான் இந்த அளவு அன்பு, கண்ணியம், நேசம், விருந்து உபசரிப்பு போன்றவற்றை எனது முழு வாழ்நாளிலும் ஒருபோதும் பார்த்ததில்லை.

நான் பார்த்தது, மேலும் அதன் மூலம் உணர்ந்தது என்னவென்றால், இது நிச்சயமாக முஸ்லிம் அல்லாதவர்கள் மீது மிகச் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் பக்கம் வருவதன் பக்கம் கண்டிப்பாக முயற்சி செய்வார்கள். ஏனென்றால் நான் அஹ்மதி கிடையாது.

எனவே இதன் விளைவாக முஸ்லிம்களின் இதர பிரிவைச் சார்ந்த மக்களின் உள்ளங்களில் இருப்பதைப் போன்று எனது உள்ளத்திலும் சில தவறான எண்ணங்கள் இருந்தன. அங்கு நான் சொற்பொழிவைக் கேட்டேன். அங்கு எழுதப்பட்டிருந்த கலிமாவைப் படித்தேன். தொழவும் செய்தேன். ஆனால் எனக்கு எவ்வித

வேறுபாடும் தென்படவில்லை. இவற்றைதான் நாமும் செய்கின்றோம். இதையே அஹ்மதியும் செய்கின்றார்கள். இவர்களது கலிமாவும், இவர்களது தொழுகையும், இவர்களது திருக்குர்ஆனும் நம்மிடம் இருப்பதைப் போன்றே இருக்கின்றது என்று நான் உணர்ந்தேன்.

மேலும் மிக முக்கியமான விஷயம் இறுதி நபித்துவம் தொடர்பான விஷயமாகும். இந்த விஷயத்தில் நான் சிந்திக்கும் கட்டாயத்திற்கு உள்ளானேன். மேலும் நான் எனது பிரிவை உண்மையாளர் என்று கூறவா? அல்லது அஹ்மதி பிரிவைக் கூறவா? என்ற கவலையும், சிந்தனையும் எழுந்தது.

ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதனால் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பலன் என்னவென்றால், நான் அஹ்மதிளோடு உட்கார்ந்து அனைத்தையும் எனது கண்களாலேயே பார்த்தது. மற்றும் எனது காதுகளால் கேட்டது ஆகியவை தான். இப்போது நான் சிறந்த முறையில் இஸ்லாம் என்றால் என்ன? இறுதி நபித்துவம் என்ன? என்பது தொடர்பாகப் பார்ப்பேன். எனக்குக் காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவு மிகவும் பிடித்திருந்தது. குறிப்பாக கடைசி நாளில் ஹுஸூர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த நான்கு நாட்கள் எனது வாழ்நாளிலிலேயே மிகச் சிறந்த நாட்களாகும். மற்ற முஸ்லிம்கள் வெறும் முழக்கம் மட்டுமே இடுகின்றனர். பகைமையைப் பரப்புகின்றனர். ஆனால் இங்கு நான் அன்பு, கண்ணியத்தை மட்டுமே பார்த்தேன். என்னுடன் சில முஸ்லிமல்லாத நண்பர்களும் இருந்தனர். அவர்கள் முஸ்லிம்களின் நடைமுறை மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கண்ணியம் வழங்குதல் ஆகியவற்றைப் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானார்கள். ஏற்பாட்டாளர்களில் ஒவ்வொருவரும் மிகுந்த அன்புடனும், கண்ணியத்துடனும் பேசினர். மேலும் வழிகாட்டினர். இவ்வளவு பெரிய மாநாட்டை மிகச் சிறந்த முறையில் கையாண்டார்கள். நான் உள்ளத்தால் நன்றி கூறுகின்றேன்.

பிறகு லேட்வியாவிலுள்ள Agriculture துறையைச் சார்ந்த ஒருவர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்:

நான் இதில் கலந்து கொள்வதற்காக முடிவு செய்த போது, இந்த நிகழ்ச்சியில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டு விடக்கூடாதே என்று அஞ்சினேன். ஆனால் நான் மாநாட்டில் பாதுகாப்புத் துறையை பார்த்த போது இந்த நிகழ்ச்சிகள் மற்றும் இதில் கலந்து கொள்ளக்கூடிய எவருக்கும் எவ்வித இழப்பையும் ஏற்படுத்த முடியாது என்பதை உணர்ந்தேன்.

எவ்வாறிருப்பினும், இது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் தானே ஏற்பாடு செய்கின்றான். நமது Security யினால் என்ன நடந்து விடும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த முழு நிகழ்ச்சிகளிலும் செக்கியூரிட்டி கொடுப்பவர்களைப் பாராட்டுகின்றேன். இஸ்லாம் தொடர்பாக எனக்கு குறிப்பான எந்தவொரு அறிவும் கிடையாது. மாநாடு எனக்கு உண்மையான இஸ்லாத்தின் போதனையை வழங்கியது. இதர முஸ்லிம் அமைப்புகளைப் பற்றியும் கூறியது. அவ்வாறே அஹ்மதிய்யா பிரிவிற்கும், மற்ற பிரிவுகளுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவுபடுத்தியது.

இந்த நிகழ்ச்சியில் நான் எல்லாவற்றையும் விட உணர்ந்த விஷயம் என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத் அன்பு செலுத்தக்கூடிய ஓர் ஜமாஅத் ஆகும். எனவே நான் இவ்விஷயத்தை மிகவும் பாராட்ட விரும்புகின்றேன். நான் உங்களது ஜமாஅத்தின் ஏற்பாடுகளைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விட்டேன். இவ்விஷயமானது உங்களால் உலகத்தை சரியான முறையில் வழிநடத்த முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றது.

லேட்வியாவிலிருந்து கலோர்யா என்ற மாணவி முதல் முறை வந்திருந்தார். முஸ்லிம் நிகழ்ச்சியில் முதல் முறையாகக் கலந்து கொள்கின்றார். அவர் கூறுகின்றார்:

எனக்கு எல்லாமே நன்றாக இருந்தது. உணவு உண்பது, குடிப்பது போன்றவை. மக்கள் நல்லொழுக்கமுடையவர்களாக இருந்தனர். டியூட்டியில் பணியாற்றக்கூடிய லஜ்னா எப்போதும் சிரித்துக் கொண்டிருந்தார். அதிகமான மக்களுக்கு லஜ்னா தரப்பின் மீதே புகார் இருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எப்போதும் லஜ்னா சகோதரிகள் புன்னகைத்தவாறே இருந்தனர். எனக்கு இது மிகவும் பிடித்திருந்தது. சிறியவர்களும் பெரியவர்களும் சுற்றுச்சூழலை தூய்மையாக வைப்பதற்கு முழுமையாக முயற்சி செய்தனர். நான் என்னை மிகவும் நிம்மதியடைந்தவளாக உணர்ந்தேன்.

இவர் பைஅத் நிகழ்ச்சியைப் பற்றி கூறுகின்றார். அதாவது எனது பார்வை Screen மீது பட்டது. ஆண்கள் மாநாட்டுத் திடலில் ஒருவர் மற்றவரது தோலின் மீது கை வைத்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இஸ்லாம் தொடர்பான எனது எண்ணம் முற்றிலுமாக மாறி விட்டது. தற்போதும் கூட உலகத்தில் நன்மையை விரும்பக் கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

லேட்வியா குழுவில் வந்திருந்த Anastasia என்ற ஒரு பெண், நான் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஆற்றிய சொற்பொழிவைப் பற்றி அவர்கள் கூறுகின்றார்கள்:

அவர்கள் கூறிய விஷயம் முற்றிலும் சரியானதாகும். இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: சொற்பொழிவைக் கேட்க நான் ஆண்களுக்கான மாநாட்டுத் திடலுக்கு வந்தேன். எஞ்சிய மற்ற நேரத்தை லஜ்னா திடலில் கழித்தேன். ஆண்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தது எனக்கு வெட்கத்தை ஏற்படுத்தியது. எனது தலையில் துபட்டா இல்லாதது எனக்கு ஏதோ மாதிரி இருந்தது.

ஒரு கிறித்துவ பெண்மணி ஆண்களோடு துபட்டா அணியாமல் அமர்ந்திருப்பதால் வெட்கப்படுகின்றார் என்ற இந்த விஷயமானது, எந்த பெண் பிள்ளைகள் எங்களுக்கு இங்கு வந்து துபட்டா அல்லது ஸ்கார்ஃப் அணிவது வெட்கமாக இருக்கின்றது என்று கூறுகின்றனரோ அவர்களுக்கு இது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குக் காரணியாக அமைய வேண்டும்.

கோஸோவேயிலிருந்து ஒரு வக்கீல் தமது தாக்கத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்:

மாநாட்டின் ஏற்பாடுகளைப் பார்த்து, ஒவ்வொரு நபரும் கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டவாறு தமது பணிகளைச் செய்கின்றார் என்று தோன்றுகிறது. இந்த அனைத்து கட்டுப்படுதலும் காலத்தின் கலீஃபா மீது கொண்டிருந்த அன்பு என்ற வடிவத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கிடைத்துள்ளது. காலத்தின் கலீஃபாவை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் ஒரே சரடில் கோர்க்கப்பட்டுள்ளனர்.

கோஸோவேயிலும் இவ்வாறான மாநாடுகள் நடக்கின்றன. ஆனால் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு ஒரு வித்தியாசமான உணர்வு மனிதனிடம் ஏற்படுகின்றது. அனைத்து மத மற்றும் நிறத்தைச் சார்ந்தவர்களும் இதில் பங்கு பெறுகின்றனர். ஒவ்வொருவரது தேவையை கருத்தில் கொண்டு அவர்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றார்கள். இந்த வக்கீல் அஹ்மதி கிடையாது.

கோஸோவே குழுவில் ஒரு பிஸிக்ஸ் பிரஃபஸர் ஆர்பர் (Arber) இருந்தார். அவர் கூறுகின்றார்:

இத்தனை மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவது, அவர்களது தேவைகளை முழுமை செய்வதென்பது என்னால் நம்ப முடியவில்லை. மாநாட்டில் கலந்து கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும் மிகவும் உன்னிப்பாகப் பார்த்தேன். எவ்வாறு ஒவ்வொரு விஷயமும் ஒரு அமைப்பின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் தேவைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பணிக்கும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். லங்கருக்கு செல்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அங்கு ஒருவரை சந்தித்தேன். அவர் கடந்த 22 ஆண்டுகளாக வெங்காயத்தை உரிக்கும் பணியை செய்து வருகின்றார். கடந்த 22 ஆண்டுகளாக அவரிடம் ஒரே ஒரு கத்தி தான் இருக்கின்றது. அவர் என்னிடம் நான் 22 ஆண்டுகளாக இந்த கத்தியை ஏன் வைத்துள்ளேன்? என்றால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த கத்தியைத் தான் பயன்படுத்தி வந்தார்கள். மேலும் இதில் தமது கரங்களை பதித்தார்கள் என்று கூறினார். ஆக இந்த விஷயம் அவரிடத்தில் மிகச் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஜார்ஜியாவிலிருந்து 38 பேர் கொண்ட ஒரு குழு ஜெர்மனி மாநாட்டில் கலந்து கொண்டது. இரண்டு பாதிரி சாஹிபான் மற்றும் இரண்டு முஃப்தி சாஹிபான் மற்றும் ஷியா மற்றும் சுன்னிகளின் தலைவர்களும் இருந்தனர். மற்ற 30 அஹ்மதியல்லாதவர்களும் இருந்தனர். இந்த குழுவில் வந்திருந்த அஹ்மதியல்லாத ஒரு மஸ்ஜிதின் இமாம் ஜன்பூல் (Jambal) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஜார்ஜியாவில் மஸ்ஜிதின் இமாம் ஆவேன். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அழைப்பை ஏற்று ஜெர்மனி வந்துள்ளேன். நான் இஸ்லாம் தொடர்பாக முன்பு அறிந்திராத பல புதிய விஷயங்களைக் கற்றுக் கொண்டேன்.

என்னைப் பற்றி அவர் கூறுகின்றார்: மனித இனத்திற்கு உதவி செய்வது நமது கடமையாகும். இஸ்லாம் மார்க்கம் ஓர் அமைதியின் மார்க்கமாகும் என்று அவர்கள் கூறிய விஷயம் எனக்கு என்றும் நினைவில் இருக்கும். இங்கு வந்து எங்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை தெரிய வந்தது.

பிறகு லேகூ (Lako) சாஹிபா என்ற இன்னொரு பெண்மணி கூறுகின்றார்கள்:

மாநாட்டு ஏற்பாட்டின் காரணமாக நான் ஒவ்வொரு நபருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பிறகு இர்மா (Irma) சாஹிபா கூறுகின்றார்கள்:

இன்று பெண்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். மேலும் பெண்கள் அனைத்து நிகழ்ச்சிகளையும் எவ்வாறு மேனேஜ் செய்கின்றார்கள் என்று நான் வியப்படைந்தேன்.மேலும் பெண்களுக்கு பெண்கள் Security Check ம் செய்கின்றனர் என்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றாகும். இவை அனைத்தும் எனக்கு பிடித்திருந்தது. நான் உங்களுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பெண்களுக்கான நிகழ்ச்சிகளையும் கண்டேன். எந்த அளவு பெண்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத் கருத்தில் கொள்ளப்படுகிறது என்ற விஷயம் மிகவும் வியப்பிற்குரியதாக இருந்தது. குறிப்பாக காலத்தின் கலீஃபா அவர்கள் தமது கரங்களால் பெண்களுக்கு கல்விக்கான சான்றிதழ் வழங்கியது மிகப்பெரிய விஷயமாகும்.

ஜார்ஜியாவைச் சார்ந்த ஒரு முஸ்லிம் கூறுகின்றார்கள்: நான் ஒரு முஸ்லிம் அமைப்பின் சேர்மேன் ஆவேன். இந்த மாநாட்டில் கலந்து கொள்வது எங்களுக்கு மிகவும் கண்ணியப்படுத்தும் விஷயமாகும். நான் இங்கு சகோதரத்துவம், அன்பு, ஆன்மீகம் ஆகியவற்றைக் கண்டேன். இங்கு வந்தது ஒரு சிறந்த சந்தர்ப்பத்திலிருந்து பயனடைந்தோம் என்றே நான் உணர்கின்றேன்.

முஹம்மது அக்பர் சாஹிப் என்ற ஒரு நண்பர் கூறுகின்றார்:

குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு மஹ்தி வருவார். அவர் உலகைப் புதுப்பிப்பார். நாம் அவருக்காகவே காத்திருக்கின்றோம் என்று செவியுற்றுள்ளோம். ஆனால், நாம் யாருக்காக காத்திருந்தோமோ அவர் வந்து சென்று விட்டார். தற்போது அவரது கலீஃபாக்களின் தொடர் சென்று கொண்டிருக்கிறது என்ற விஷயத்தை முதல் முறையாக கேள்விப்படுகின்றேன். இப்போது நான் ஜமாஅத்தின் பிரசுரங்களைப் படிப்பேன். எனக்கு மன திருப்தி கிடைக்கும் என நம்புகின்றேன்.

நீல நிற ஆடையை அணிந்திருந்த பிஷப் சாஹிப் வந்திருந்தார். அவர் தமது எண்ணங்களை வெளிப்படுத்தினார். மாநாட்டைப் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு ஆளானார்.

ஹன்கரியிலிருந்து ஒரு சர்ச்சின் பாதிரி மாநாட்டிற்கு வந்திருந்தார். இவர் மார்க்கப் பணிகள் மட்டுமின்றி தொண்டு புரிவதிலும் ஈடுபாடுள்ளவர். அவர் கூறுகின்றார்:

நான் கிறித்தவனாவேன். ஆனால் உங்களது மாநாட்டிற்குச் சென்று எனது ஈமானுக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டது. நான் புத்துணர்ச்சியோடு திரும்பிச் செல்கின்றேன்.

கூறுகின்றார்: நான் சார்ஜ் ஆகி செல்கின்றேன். இது எனக்கு முழு வருடமும் எனது பணிகளில் உதவியாக இருக்கும்.

முரப்பி சாஹிப் கூறுகின்றார்கள்: இவரின் மூலமாக அவரது ஊரில் மட்டுமின்றி அந்த சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய அனைவரிடமும் பழக்கம் ஏற்பட்டது. மேலும் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை சென்று சேர்ப்பதில் அவர் மூலமாக ஒரு புதிய வழி அங்கு திறந்துள்ளது.

ஹன்கரியிலிருந்து வார்கா (Varga) என்ற ஒருவர் கூறுகின்றார்கள்:

ஆண்டு மாநாடானது ஒரு மனிதன் ஒரு வியப்பிற்குரிய பொருளைப் பார்த்து வியப்பிற்குள்ளாகுவதைப் போன்று இருந்தது. நீங்கள் முழக்கம் இடும் போது உங்களது இமாம் இப்போது கட்டளையிடுவார். கட்டளைக்காக காத்திருந்து அமர்ந்திருப்பதைப் போன்று நீங்கள் லப்பைக் என்று கூறியவாறு அதை செய்து முடிப்பீர்கள் என்றே தோன்றியது.

ஆரம்பத்தில் நான் மிகுந்த அச்சத்தை உணர்ந்தேன். ஹன்கரியில் இப்படிப்பட்ட கூட்டம் என்பது மிகவும் தொலைவிலுள்ள விஷயமாகும். நூறு பேர் இருந்தால் கூட ஒரு மணி நேரத்திற்குள் ஏதாவது சண்டை ஏற்பட்டு விடும். ஆனால் ஆயிரம் பேரைக் கொண்டே இத்தகைய அமைதி நிறைந்த கூட்டத்தை இதற்கு முன்பு நான் ஒருபோதும் கண்டதில்லை.

ஹன்கரியிலிருந்து வந்திருந்த ஒரு கேம்பின் பொருளாதார துறையைக் கண்காணிக்கும் இலோனா (Illona) சாஹிபா அவர்கள் ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகளைப் பார்த்த பிறகு மாநாட்டின் செலவீனங்கள் எவ்வாறு செய்யப்படுகிறது என்று கேட்டார். அவர்களுக்கு ஜமாஅத்தின் தொண்டுகள் மற்றும் சந்தா அமைப்பு தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. இந்த விஷயத்தைக் கேட்டு மிகவும் வியப்படைந்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: மாநாடு எத்ததைய ஒரு நிகழ்ச்சி என்றால் அது மனிதனை உட்புறமாக சுத்தம் செய்கின்றது. இவர்

அஹ்மதி கிடையாது. முஸ்லிம் கிடையாது. எவ்வாறு குழந்தையை ஆரம்பத்தில் குளிப்பாட்டுவதால் அச்சப்படுகின்றதோ அவ்வாறே மனிதனின் நிலை மாநாட்டைப் பார்த்து ஏற்படுகின்றது. நான் கூறியது போன்று மாநாட்டின் தாக்கம் அந்நியர்கள் மீதும் ஏற்படுகின்றது.

ஹன்கரியிலிருந்து வந்திருந்த குழுவில் யமன் நாட்டைச் சார்ந்த மெடிக்கல் டாக்டரான வஃபா சாஹிபா கூறுகின்றார்கள்:

மாநாட்டில் கலந்து கொண்டேன். இரண்டாவது நாள் இவர்கள் பெண்கள் மாநாட்டுத் திடலில் சொற்பொழிவைக் கேட்டார்கள். இதற்குப் பிறகு ஆண்கள் மார்கியில் எனது சொற்பொழிவையும் கேட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் பெண்களது மாநாட்டுத் திடலில் தான் மகிழ்ச்சியாக இருந்தேன். என்னை பெண்கள் மார்க்கிக்கி விட்டு விடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

ஜாமிஆவைப் பார்க்க சென்ற போது மிகவும் ஆர்வத்துடன் நூலகத்திற்கு சென்று இஸ்லாத்தின் அடிப்படையான புத்தகங்களைப் பார்த்தார்கள். வெளியில் வந்து கூறினார்கள்: ஒவ்வொரு வசனமும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவே இருக்கின்றது.

ஜாமிஆவின் கட்டிடங்களில் எழுதப்பட்டிருந்த வசனங்களின் பக்கம் சைகை செய்து கூறினார்கள்: பாருங்கள். இது எவ்வளவு சரியான இடத்தில் எழுதப்பட்டுள்ளது. அது என்ன வசனம் என்றால்? வ அஷ்ரகத்தில் அர்லு பி நூரி ரப்பிஹா என்ற வசனமாகும்.

பிறகு மக்தூனியாவிலிருந்து 83 நபர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. மேலும் 50 உறுப்பினர்கள் 2000 கிலோ மீட்டம் பஸ்ஸில் பயணம் செய்து 24 மணி நேரத்தில் மாநாட்டிற்கு வந்துள்ளார்கள். இவர்களில் 21 பேர் அஹ்மதிகளாவர். 29 பேர் அஹ்மதியல்லாதவர்கள். 14 பேர் கிறித்தவர்கள். இந்த விருந்தினர்களில் ஒரு பெரிய நகரத்தின் மேயர் 4 டிவி சேனனைல் சார்ந்த 6 Journalist களுடன் கலந்து கொண்டார்.

மாநாட்டின் மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் Record செய்தார். தமது தொலைக்காட்சியில் Documentary ஒளிபரப்புவதற்காக விருந்தினர்களிடம் Interview எடுக்கப்பட்டது. மாநாட்டில் மூன்று முஸ்லிம் பேராசிரியர்களும் கலந்து கொண்டார்கள். அவர்கள் அனைவரும் நண்பர்களாவர். அவர்களில் ஒருவர் IT ல் பேராசிரியர் ஆவார். அவரது பெயர் ஜலாதீனி (Djeladini) சாஹிப் ஆகும்.

அவர் கூறுகின்றார்: நான் ஆண்டு மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் மக்தூனியாவைச் சார்ந்த அஹ்மதிகளுக்கு நன்றி கூறக் கடமைபட்டுள்ளேன். அவர்களது அழைப்பை ஏற்று நான் மாநாட்டிற்கு வந்துள்ளேன். இந்த இடத்தில் இஸ்லாத்தின் சரியான போதனைகள் வெளிப்படுத்தப்படுகின்றது. நான் இதற்கு முன்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றியும், அவர்களது கலீஃபாவைப் பற்றியும் படித்தும் கேட்டும் இருந்தாலும் பல விஷயங்களை ஜமாஅத்திற்கு எதிராகவும் கேள்விப்பட்டுள்ளேன்.

ஆனால் இங்கு வந்து இவை அனைத்திற்கும் உரிய பதில் கிடைத்து விட்டது. நான் ஜமாஅத்தின் கலீஃபாவைக் கண்டேன். அவரது கூற்றைக் கேட்டேன். அதிலிருந்து அதிகமான அறிவைப் பெற்றேன். ஜமாஅத்தின் கலீஃபா கூறிய கூற்றிலிருந்து நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானேன்.

கூறுகின்றார்கள்: கலீஃபாவின் கூற்றைக் கேட்டு கலீஃபாவின் கூற்றையும், வழியையும் முழு உலக மக்களும் கடைபிடிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். என் தரப்பிலிருந்து உங்களுக்கு சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

லேதூனியாவிலிருந்து 50 பேரைக் கொண்ட ஒரு குழு கலந்து கொண்டிருந்தது. இவர்களில் 40 பேர் ஜமாஅத்தைச் சாராத நண்பர்களாவர். 10 பேர் அஹ்மதிகள்.

ஒரு பெண்மணி கூறுகின்றார்கள்: மாநாட்டின் போது நான் ஜமாஅத்தை சேர்ந்தவளைப் போன்று என்னை உணர்ந்தேன். இந்த மாநாடு நமக்கு அனைவர் மீதும் ஒரே போன்ற அன்பை செலுத்துவது, மற்றவர்களுக்கு தொண்டாற்றுவது பற்றிய பாடத்தை தருகின்றது. இதை செயல் வடிவத்தை நாம் இந்த மாநாட்டில் பார்க்க முடியும்.

லேதோனியாவைச் சார்ந்த ஜேரோனிமாஸ் (Jaronimas) என்ற ஒருவர் கூறுகின்றார்:

நான் கட்டுரை எழுதக் கூடியவன். இஸ்லாத்தைப் பற்றி கற்றுக் கொள்வதற்காக இங்கு வந்துள்ளேன். இறைவனது இருப்பு தொடர்பாக கலீஃபா அவர்கள் எடுத்துக் கூறிய விதம் என்னிடத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

அவர் கூறுகின்றார்: கலீஃபா அவர்கள் இறை வணக்கம் மட்டும் செய்யாமல் இறைவனை சந்தோஷப்படுத்துவது நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். இந்த விஷயம் எனது உள்ளத்தை வென்று விட்டது. நான் திரும்பிச் சென்று பத்திரிகைகளில் ஜமாஅத்தைப் பற்றி கட்டுரை எழுதுவேன். மேலும் எனது நாளிதழின் முழு இதழிலும் ஜமாஅத்தைப் பற்றி அச்சிட்டு வெளியிடுவேன். இவ்வாறு செய்வதனால் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியது வரும் என்று எனக்குத் தெரியும்.

ஆனால் உண்மைக்கு துணை நிற்க விரும்புகின்றேன். எனது உள்ளம் இங்கு வந்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைந்துள்ளது. நான் உங்கள் மீதும், ஜமாஅத் மீதும் நல்ல விருப்பங்கள் வெளிப்படுத்துகின்றேன்.

தஜ்கிஸ்தானிலிருந்து ஜமாஅத்தைச் சாராத ரஹீம் சாஹிப் என்ற ஓர் அரசியல்வாதி வந்திருந்தார். அவர் கூறுகின்றார்:

எனக்கு மாநாட்டில் முதல் முறையாக கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அருகில் இருந்தவாறு ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. எவ்வாறு இரவு பகலாக பணியாற்றக் கூடியவர்கள் ஒரு உணர்வுப் பூர்வமாக தொண்டாற்றுகின்றார்கள் என்ற விஷயம் எனக்கு ஓர் உதாரணமாகும். எனது சிந்தனையில் உதித்த அனைத்து கேள்விகளுக்கும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவை சந்தித்ததன் மூலமாக உரிய பதில் கிடைத்து விட்டது.

நான் அவர்களுக்கு அருகில் அமர்ந்ததன் மூலம் அனைத்திற்கும் உரிய பதில் இந்த ஜமாஅத்தில் தான் இருக்கின்றது என்பதை உணர முடிந்தது. முஸ்லிம்களின் இன்றைய காலகட்டத்தின் நிலை குறித்த எனது கேள்விகளுக்கு சிறந்த பதிலை வழங்கினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தால் தான் வருங்காலத்தில் எல்லா முஸ்லிம் பிரிவுகளையும் ஒன்று சேர்க்க முடியும் என்று நான் கருதுகின்றேன். எனக்கு இந்த ஜமாஅத் மிகவும் சிறந்ததாக தோன்றுகிறது. இந்த மாநாடு மற்றும் கலீஃபாவுடனான சந்திப்பை என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன்.

தஜ்கிஸ்தானின் ஒரு பல்கலைகழகத்தின் ஒரு லெக்சரர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்:

எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாடு மற்றும் மாநாட்டின் ஏற்பாடுகள் மிகவும் பிடித்திருந்தது. விருந்து உபசரிப்பு மற்றும் ஒத்தழைப்பு வழங்குவது போன்ற உதாரணத்தை நான் வாழ்க்கையில் முதல் முறை பார்த்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இங்கு அதிக சுதந்திரம் இருக்கின்றது. பெண்களுக்கு காலத்தின் கலீஃபா

ஆற்றிய சொற்பொழிவே இன்று இருக்கக்கூடிய பிரச்சனைகளுக்கு உண்மையான தீர்வாகும். முழு உலகமும் இதன்படி அமல் செய்ய வேண்டுமே! அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் காலத்தின் தற்போதைய பிரச்சனைகள் மற்றும் பத்திரிகை செய்திகள் பற்றி அதிகம் அறிந்தவர்களாக இருக்கின்றார்கள். நான் கலீஃபாவை சந்திப்பதற்கு முன் அவர் மார்க்கத்தைச் சார்ந்த ஒரு நபரே ஆவார் என்றே எண்ணினேன்.

ஆனால் நான் அவர்களைச் சந்தித்த பிறகு பல விஷயங்கள் அவர்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அவர்கள், உலகத்தில் குழப்பத்தைப் பரப்புவதில் மீடியாவின் பங்கும் உள்ளது என்று கூறியது மிகவும் சரியான விஷயமாகும். மீடியா விரும்பினால் அமைதி பற்றிய தமது கருத்தை அவர்கள் பரப்ப முடியும். எனது நல்ல விருப்பங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்துடனும், காலத்தின் கலீஃபாவுடனும் இருக்கின்றது.

சேனிகாலின் நபூர் என்ற இடத்தின் மேயர் அவர் சேனிகாலின் ஒரு பெரிய அமைப்பின் பிரதிநிதியாக மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் Stage ல் எனக்கு அன்பளிப்பும் வழங்கினார்.

அவர் கூறுகிறார்: நான் எனது கலீஃபாவிடம் பைஅத் செய்துள்ளேன். ஆனால் இங்கு பார்த்த பைஅத்தின் காட்சியை எனது வாழ்நாளில் ஒருபோதும் கண்டதில்லை. இந்த விஷயத்தை அவர் கூறும் போது மிகவும் உணர்வுப்பூர்வமாக அவர் ஆகி விட்டார். அவரது கண்களில் கண்ணீர் வந்தது.

அவர் கூறினார்: எங்களுக்கும் ஒரு கலீஃபா இருக்கின்றார். ஆனால் கிலாஃபத்தோடு இத்தகைய அன்பு செலுத்தக்கூடியவர்களை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. இப்படிப்பட்ட காட்சிகளை நான் ஒருபோதும் கண்டதுமில்லை. மேலும் கிலாஃபத் மீது இத்தகைய அன்பு செலுத்தக்கூடியவர்களையும் பார்த்ததில்லை.

எவ்வாறு சஹாபாக்கள் உயிரையே அர்ப்பணித்தார்கள் என்பதை இப்போது என்னால் தெரிந்து கொள்ள முடிகின்றது. மக்களது உள்ளங்களில் நாள் கண்ட எழுச்சி மற்றும் அன்பைப் பார்த்து கலீஃபா ஒரு சைகை செய்தால் இவர்கள் அந்த பணியிலிருந்து பின்வாங்க மாட்டார்கள் என்பதை நான் உணர்ந்தேன். அத்தகைய அன்பையும், கட்டுப்படுதலையும் நான் கண்டேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களிடத்திலும் மூன்று நாட்களுக்கான மாநாடு நடக்கின்றது. எங்களது கலீஃபா வந்தால் எந்தவொரு நபரும் அமைதியாக உட்கார மாட்டார். ஆனால் இங்கு கலீஃபா வரும் போது அனைவரும் அமைதியாகி கலீஃபா கூறும் விஷயங்களைக் கேட்பதற்காக ஆயத்தமாக அமர்ந்திருக்கின்றார்கள். நான் இதைப் போன்ற ஒன்றை எந்தவொரு உலக அல்லது மார்க்கத் தலைவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் கண்டதில்லை.

மாநாட்டின் மூன்றாவது நாளில் பைஅத் வாங்கப்பட்டது. அப்போது புதிதாக பைஅத் செய்தவர்கள் 42 பேர் ஆவர். அவர்கள் 17 பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்தவர்கள் ஆவர்.

அல்பானியாவிலிருந்து வந்திருந்த ஒரு நண்பர் பரக் சாஹிப் கூறுகின்றார்கள்:

நான் அஹ்மதிய்யதின் கடும் எதிரியாவேன். எனது சகோதரரும் நண்பரும் அஹ்மதிய்யதில் இணைந்து விட்டனர். எனது சகோதரனுக்கு அஹ்மதிய்யத் மீது வெறுப்பு ஏற்பட வேண்டும் என்று நான் பல முயற்சிகளை செய்து வந்தேன். இறுதியில், நாம் துஆ செய்வோம். எவர் உண்மையாளரோ அவருக்கு வெற்றி கிடைக்கும் என்று எங்களுக்கிடையில் உடன்படிக்கை செய்து கொண்டோம்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தொடர்ச்சியாக துஆ செய்த பிறகு எனது உள்ளம் விரும்பியது. அதாவது முழுமையான விவரங்கள் தெரியாமல் முடிவெடுப்பதற்கு முன்பாக தாமே சென்று மாநாட்டையும், காலத்தின் கலீஃபாவையும் பார்ப்போம்.

எனவே கடந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டேன். எனக்கு மன நிம்மதி கிடைத்தது. இருந்த போதிலும் ஒருவிதமான நிம்மதியற்ற நிலை இருந்தது. இறுதியாக முடிவெடுக்கும் தருணமும் வந்தது. எனக்கு காலத்தின் கலீஃபாவின் முகம் தென்பட்டது. நான் அவர்களைக் கண்டதும் எனது அனைத்து பகைமையும், எதிர்ப்பும், சந்தேகங்களும் உள்ளத்திலிருந்து வெளியேறியது. இப்போது மறுப்பதற்கு என்னிடத்தில் எதுவும் எஞ்சியிருக்கவில்லை.

எனவே மாநாட்டிலிருந்து திரும்பி வந்து தான் பைஅத் படிவத்தை நிரப்பினேன். இப்போது நான் வந்துள்ளேன். பைஅத் செய்வதற்கான நற்பாக்கியத்தை பெற்றேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எப்போது எனக்கு இருந்த பிரச்சனை என்னவென்றால் நான் திருமணம் செய்யவிருந்த பெண் அஹ்மதி ஆக விரும்பவில்லை. எனவே நான் முயற்சி செய்து அவர்களை என்னோடு அழைத்து வந்துள்ளேன். எனது மனைவி காலத்தின் கலீஃபா அவர்கள் லஜ்னாக்களுக்கு ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டார்கள். அப்போதே அவர்கள் அஹ்மதியாக வேண்டும் என்ற முடிவை எடுத்தார்கள்.

நான் திருமணம் செய்யவிருந்த அந்த பெண் கூறினார்கள்: எந்த ஜமாஅத்தில் இத்தகைய அன்பு செலுத்தக்கூடிய, கருணையுள்ளம் கொண்ட கலீஃபா இருப்பாரோ அத்தகைய நபரால் எல்லா அருட்களும் கிடைத்து விட்டது. இது மற்ற முஸ்லிம்களிடம் இல்லை. இப்போது நாம் அஹ்மதி என்ற முறையில் திருமணம் செய்து கொள்வோம்.

ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் மீடியா கவரேஜ் செய்யப்பட்ட அறிக்கையைப் பொருத்தவரை, International Media ல் World யூரோப்பியன் நியூஸ் Agency யிலிருந்து இரண்டு TV Channel ன் மூன்று Journalist மற்றும் Online பத்திரிகையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். தேசிய அளவில் ஜெர்மனியின் நான்கு டிவி சேனல்ஸ் மற்றும் இரண்டு பிரின்ட் மீடியா மற்றும் ஒரு ரேடியோவின் பிரதிநிதியும் வந்திருந்தார். அவ்வாறே தேசிய News Agency ன் பிரதிநிதியும் கலந்து கொண்டார்கள்.

உள்ளூர் அளவில் இரண்டு டிவி சேனல்ஸ், இரண்டு ரேடியோ ஸ்டேஷன், இரண்டு பிரின்ட் அன்ட் மீடியா மற்றும் பத்தரிகையின் ஒரு பிரதிநிதியும் கலந்து கொண்டார். ஒட்டுமொத்த அளவில் மாநாட்டின் மூன்று நாட்களும் கவரேஜ் செய்யப்பட்டது. அறிக்கையின் அடிப்படையில் நான்கு டிவி சேனல்ஸ் மற்றும் இரண்டு ரேடியோ சேனல் மற்றும் 46 பத்திரிகை மற்றும் மீடியாவின் மூலமாக 6 கோடியே 28 லட்சத்தி 57 ஆயிரம் மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. இது மட்டுமின்றி மேலும் கட்டுரைகள் வந்து கொண்டிருக்கின்றன.

பெல்ஜியத்திலும் சிலரது தாக்கங்கள் தொடர்பான கருத்துகள் ஒன்று சேர்க்க முடியாமல் போய் விட்டது. மாஜித் சாஹிப் அவர்களது அறிக்கையில் பின்னர் அது வந்து விடும். பெல்ஜியத்தில் மீடியா கவரேஜைப் பொருத்தவரை, டிவி சேனல் மட்டுமின்றி மூன்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. அதன் மூலமாக இரண்டு மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. பெல்ஜியம் டிவி மற்றும் பத்திரிகைகளில் மாநாடு தொடர்பாக செய்திகள் ஒளிபரப்பப்பட்டது. அப்போது 40000 மக்கள் தொகையை கொண்ட தல்பீக் என்ற இடத்திலிருந்து சிலர் போன் செய்து,

தல்பீக்கில் 4000 முஸ்லிம்கள் ஒன்று கூடியுள்ளனர். அது எங்களுக்கு தெரியாமல் இருந்து விட்டது என்று அவர்கள் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர். அவர்களது பார்வையில் 4000 முஸ்லிம்கள் ஒன்று கூடுவது என்பது நிச்சயமாக குழப்பத்திற்குக் காரணமாக அமைய வேண்டியதாக இருந்தது. ஆனால் அவர்கள் கூறுகின்றார்கள். 4000 முஸ்லிம்கள் ஒன்று கூடியுள்ளார்கள். இது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாமல் போய் விட்டது. இந்த மாநாட்டின் மூலம் எங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. அவ்வாறே எந்தவொரு கூச்சலும் நாங்கள் கேட்கவில்லை என்று கூறினார்கள்.

பிறகு M.T.A ஆப்ரிக்கா மூலமாக ஆப்ரிக்காவைச் சார்ந்த பல்வேறு நாடுகள் அவர்களது டிவி சேனலில் நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். Review Of Religions Online ல் ஒரு புதிய நிகழ்ச்சியை ஆரம்பித்துள்ளது. அதன் மூலமாக 1.98 மில்லியன் மக்கள் வரை மாநாட்டின் நிகழ்ச்சிகள் சென்று சேர்ந்தது.

இது தவிர மக்களின் தாக்கம் மற்றும் மீடியாவின் செய்திகள் பற்றி எண்ணற்ற அறிக்கைகள் உள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தின் உண்மையான பிம்பம் உலகிற்கு முன்னால் எடுத்து வைக்கப்படுகின்றது. மேலும் உலகிற்குத் தெரிய வருகின்றது. அல்லாஹ் இந்த மாநாட்டின் தாக்கங்களை நீண்டதாகவும், நிலைத்திருக்கவும் செய்வானாக.

தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா, கனடாவைச் சார்ந்த சய்யிது ஹஸ்னாத் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். ஆகஸ்ட் 27 அன்று தனது 92 வது வயதில் அவர்களது மரணம் நிகழ்ந்தது. اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சஹாபியான தில்லியைச் சார்ந்த டாக்டர் ஹஸ்ரத் சய்யிது ஷஃபீ அஹ்மது சாஹிப் மற்றும் சய்யிதா குரைஷா தாஹிர் சாஹிபா அவர்களது மகனாவார்கள். பரிசுத்தமான, கலப்பற்ற நபராவார். வஸிய்யத் செய்திருந்தார்கள். 70 களில் கனடாவிற்கு வந்த ஆரம்பகால மக்களில் ஒருவர் ஆவார்கள். அவர்கள் கனடா மீடியாவிலும், மாநில மற்றும் உள்ளூர் அளவில் ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்தார்கள். பாகிஸ்தானில் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்தார்கள். சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக இறுதி மூச்சு வரை முயற்சி செய்து வந்தார்கள்.

அவர்கள் Human Rights and Religion Center ன் தோற்றுனராகவும், கனடா பத்திரிகையின் பப்ளிஷர் மற்றும் துணை ஆசிரியராகவும் இருந்தார்கள். பல்வேறு நூட்களை எழுதியுள்ளார்கள். 1982 ஆம் ஆண்டு அன்னார் கனடாவின் ராஜர்ஸ் டிவி சேனலில் எவ்வித கூலியுமின்றி ஜமாஅத் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். 12 டிசம்பர் 1982 ஆம் ஆண்டு முதல் முறையாக உலக அளவில் கனடாவின் டிவி சேனலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் புகைப்படங்கள் மற்றும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பதற்கான நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

85,86 களில் அஹ்மதிய்யா கெஸட் கனடாவின் ஆசிரியராக இருந்தார்கள். மனித உரிமைகளை வழங்குவது தொடர்பான அன்னாரது தொண்டின் காரணமாக கனடா அரசாங்கம் அவர்களது பெயரில் புகைப்படத்துடன் கூடிய ஒரு ஸ்டேம்பையும் வெளியிட்டது. கனடா அரசாங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் அவர்களுக்கு பல விருதுகளை வழங்கியுள்ளது. கனடா ஜமாஅத்தில் மூன்று முறை தேசிய உமூரே ஆமா செயலராக தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

1988 ஆம் ஆண்டு கனடாவில் குடியேறும் அஹ்மதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக 15 நாட்களுக்கு ஒரு முறை வெளிவரும் வகையில் new canada என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்கள். இதன் மூலமாக அரசாங்கத்திடம் கனடாவிற்கு புதிதாக வருபவர்களுக்கு அவர்களது உரிமையை பெற்றுத் தருவதற்கான பாக்கியத்தை பெற்றார்கள்.

இந்த பத்திரிகையில் அஹ்மதிய்யத்தின் கொள்கை, அஹ்மதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுதவற்காக ஒரு தைரியமிக்க Journalist ஆக தமது பங்கை அளித்தார்கள். அவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய நூல்களையும் அறிமுகம் செய்தார்கள். அவர்கள் செய்த பணி மிகவும் பெரிது. அல்லாஹ் அவர்களது அந்தஸ்த்தை உயர்த்துவானாக. மஃபிரத் வழங்குவானாக. கருணையோடு நடந்து கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா ஹாலேன்ட் மற்றும் இந்தோநேஷியாவின் முன்னால் முபல்லிக் ஹாபிஸ் குத்ரதுல்லாஹ் சாஹிப் அவர்களது மனைவியான முபாரக்கா ஷவ்கத் சாஹிபா அவர்களுடையதாகும். செப்டம்பர் 8 ல் தனது 94 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

பாபு அப்துல் மஜீத் சாஹிப் அவர்களின் மகளாவார்கள். 1940 ல் ஹாபிஸ் குத்ரதுல்லாஹ் சாஹிப் அவர்களோடு அன்னாரது திருமணம் நடைபெற்றது. அவர் வாழ்க்கையை அர்ப்பணித்த, இயக்கத்தின் ஆரம்பகால முபல்லிக்களில் ஒருவர் ஆவார். 53 வருடங்கள் அன்னாரோடு அவர்கள் இருந்தார்கள். ஏறக்குறைய 20 க்கு அதிகமான வருடங்கள் ஹாபிஸ் சாஹிப் தப்லீக் மைதானத்தில் இருந்ததன் காரணமாக நாட்டிலிருந்து வெளியே இருந்ததன் காரணமாக இவர் தமது குழந்தைகளுக்கு சிறந்த முறையில் தனியாக இருந்து தஃலீம் மற்றும் தர்பிய்யத் வழங்கினார். பழைய முபல்லிக்களின் மனைவிமார்கள் பெரிய பெரிய தியாகங்களை செய்துள்ளனர். தனது கணவரைப் பிரிந்து 15,20 வருடங்கள் தனிமையில் இருந்துள்ளார்கள்.

மிகவும் சிறந்த, துஆ செய்யக்கூடிய, இறை வணக்கம் செய்யக்கூடிய பெண்மணி ஆவார்கள். குழந்தைகளுக்கு திருக்குர்ஆனை கற்றுத் கொடுத்த மற்றும் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை முறையாக பேணி வந்தார்கள். ஜமாஅத் பணிகளில் முறையாக கலந்து கொள்கின்ற, கிலாஃபத்தோடு வலுவான உயரிய தொடர்பை கொண்டிருந்த பெண்மணி ஆவார்கள்.

கேடாலான் (Catalan) மொழியில் அச்சிடப்பட்ட திருக்குர்ஆனின் முழு செலவையும் ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் ஹாபிழ் சாஹிப் மற்றும் அவர்களது குடும்பத்திற்கு கிடைத்தது. இந்தோநேசியாவில் ஒரு பள்ளிவாசல் கட்டுவதற்கான முழுத் தொகையையும் ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு அவர்களது குடும்பத்திற்கு கிடைத்தது.

அவர்களது குடும்பத்தில் அப்துல் அஸீஸ் சாஹிப் என்ற ஒரு மகனும் மூன்று மகளும் இருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் அவர்களது நன்மையை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக. மஃபிரத் வழங்குவானாக. அதாவுல் முஜீப் ராஷிது சாஹிப் அவர்களின் மாமாவின் மனைவியாவார்கள்.

மூன்றாவது ஜனாஸா ஆஸ்திரேலியாவின் நாயிப் அமீர் சவுத்ரி காலித் சைஃபுல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். செப்டம்பர் 16 அன்று தமது 87 வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அன்னாரது தந்தைவழி பாட்டனார் குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சார்ந்த சவுத்திரி முஹம்மது கான் சாஹிப் அவர்களது மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. 1890 ல் இளைஞராக இருக்கும் போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்கான பாக்கியத்தைப் பெற்றார்கள். சவுத்ரி முஹம்மது கான் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாமே அஹ்மதிய்யத் தொடர்பான தூதுச் செய்தியை வழங்கியதனால் அந்த வகையில் இவர் நற்பேறு பெற்றவராவார்.

அவர் காதியான் சென்றார். அஸர் தொழுகைக்கான நேரமாக இருந்தது. அவர்கள் மஸ்ஜிது அக்ஸாவில் தொழலாம் என்று கூறி அங்கு தொழச் சென்றார். அங்கு சென்ற போது தொழுகை நிறைவுற்றிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். சலாம் கூறினார்கள். ஆனால் இந்த மக்கள் அதற்குள் தொழ ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அங்கேயே அமர்ந்து அவர்கள் தொழுது முடித்த பின் அவர்களிடம், உங்களுக்கு என் தூதுச் செய்தி வந்து சேர்ந்ததா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் இல்லை; எந்த அறிவிப்பும் வரவில்லை என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களை அழைத்துச் சென்றார்கள். அங்கு அலமாரியில் பிரசுரங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம், உங்கள் ஊரில் எழுதப் படிக்க தெரிந்த எத்தனை நபர்கள் உள்ளனரோ அவர்களுக்காக எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு இவர்கள், எழுதப்படிக்க தெரிந்த நபர்கள் 3,4 பேர் தான் என்றாலும் நான் 14,15 பிரசுரங்கள் எடுத்துக் கொண்டேன். அன்னாரது வாதம் தொடர்பான பிரசுரத்தையும் எடுத்துக் கொண்டேன். பிறகு அதனைப் படித்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளானேன்.

பிறகு இந்த மக்கள் சிக்வா ஊரைச் சார்ந்த ஹஸ்ரத் மியான் ஜமாலுத்தீன் சாஹிப் மற்றும் மியான் கைர் தீன் சாஹிப் அவர்களிடம் பிரசுரத்தைப் படித்து விட்டு சென்றார்கள். அவர்களிடம், நாங்கள் ஏற்றுக் கொண்டு விட்டோம். நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

எனவே சவுத்ரி முஹம்மது கான் சாஹிப் சிக்வா என்ற ஊரிலிருந்து காதியான் சென்றார்கள். காதியான் சென்று பைஅத் செய்தார்கள். இவ்வாறு அவர்கள் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

பைஅத் செய்த பிறகு கூறினார்கள்: ஒரு நாள் சவுத்ரி முஹம்மது கான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கால்களை அமுக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது தயக்கத்துடன் அன்னாரிடம், ஹுஸூர் எனக்கு ஏதாவதொரு வஸீஃபாவை கூறுங்கள். அதன் மூலம் எனது மார்க்கமும் உலகமும் சீரடைந்து விட வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நமது வஸீஃபா என்னவென்றால், தொழுகையைச் சரியாக பேணி வாருங்கள். அதிகமாக இஸ்திஃபார் செய்து வாருங்கள் என்று கூறினார்கள்.

பிறகு இன்னொரு முறையும் கால்களை அமுக்கிவாறு அன்னாரிடம் இது தொடர்பாகக் கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இஸ்திஃபார் மற்றும் தரூது ஷரீஃபை அதிகமாக ஓதி வாருங்கள் என்று கூறினார்கள். எனவே இவர்கள் வாழ்நாள் முழுவதும் இதன்படி அமல் செய்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த அறிவிப்பை எழுதியுள்ளார்கள்.

மதிப்பிற்குரிய சவுத்ரி காலித் சைஃபுல்லாஹ் சாஹிப் தமது பணி நிமித்தமாக எங்கிருந்தாலும் அவரது தந்தைவழி பாட்டனாரின் வழிமுறையை அவர்கள் கடைபிடித்து வந்தார்கள். ஜமாஅத் தொண்டுகளைச் செய்து வந்தார்கள். நூற்றாண்டு விழாவின் ஸ்டேன்டிங் கமிட்டியின் தலைவராகவும், பைஸிலாபாத் ஜமாஅத்தின் ஜெனரல் செகரட்டரியாகவும், இன்ஜினியரின் அஸோஷியேஸனின் தலைமையக பினான்ஸியல் செயலராகவும், லாஹூர் சோன் லைன் ஹல்கா மற்றும் தர்பேலாவின் சதராகவும், ஆஸ்திரேலியா அன்ஸாருல்லாஹ் அமைப்பின் சதராகவும், நாயிப் அமீர் ஆஸ்திரேலியாவாகவும் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள்.

மஹ்மூது பங்காலி சாஹிபின் மரணத்திற்குப் பிறகு குறிப்பிட்ட காலகட்டம் வரை அன்னார் காயி மகாம் அமீர் ஆஸ்திரேலியாவாக நியமிக்கப்பட்டார்கள். இதையும் அவர்கள் அழகிய முறையில் நிறைவேற்றினார்கள். கிலாஃபத்தோடு இவர்களுக்குக் கலப்பற்ற மற்றும் கட்டுப்படுதலின் தொடர்பு இருந்தது. இவர்களது எண்ணற்ற தொண்டுகள் இருக்கின்றன. அறிவு படைத்த நபராவார். ஜமாஅத் பத்திரிகைகளில் இவரது கட்டுரையும் வெளிவந்தது. எளிமையான மனிதராவார். எப்போதும் புன்சிரிப்புடன் தென்படுவார். சமாதானத்தை விரும்பக்கூடியவர். அல்லாஹ் இவரது அந்தஸ்த்தை உயர்த்துவானாக. வஸிய்யத் செய்திருந்தார்.

தமக்குப் பின்னால் மூன்று மகள்கள் மற்றும் இரண்டு மகன்களை நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். இவர்களது ஒரு மூத்த மகன் உமர் காலித் சாஹிப் யூ.கே மார்டனின் சதர் ஹல்காவாக இருக்கின்றார்கள். சிறிய மகன் அஹ்மது உமர் காலித் அவர்கள் ஆஸ்திரேலியாவின் தேசிய வக்ஃபே ஜதீது செயலராக தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்று வருகின்றார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் அன்னாரது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

## வாழ்க்கையை அர்ப்பணிக்கின்ற உடன்படிக்கை மிகவும் மகத்துவமிக்க உடன்படிக்கையாகும்

“உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது சாதாரண காரியமல்ல. மேலும், வாழ்க்கையை அர்ப்பணிக்கின்ற உடன்படிக்கை மிகவும் மகத்துவமிக்க உடன்படிக்கையாகும்... வக்ஃபே நவ் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் தமது உடன்படிக்கையை முழுமை செய்யக் கூடியவர்களாகத் திகழ்ந்தால் உலகில் நம்மால் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும்.”

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 28.10.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து...)


*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 18 October 2018 Issue No. 42

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு வேதம் என்றால் அதில் அனைத்து விதமான ஞானங்களும் இரகசியங்களும் அடங்கியுள்ளன. நான் மீண்டும் கூறுகிறேன். அதைப் பெறுவதற்கு இந்த தூய்மையான ஆற்றலின் அவசியம் உள்ளது. அதைதான் அல்லாஹ் சுயமே இவ்வாறு கூறுகிறான்.

لَا يَمَسُّهٗۤ اِلَّا الۡمُطَهَّرُوۡنَ தூய்மையாக்கப்பட்டவர்களைத் தவிர வேறெவரும் அதைத் தொட மாட்டார்கள். **(56::80)**

அதேபோன்று திருக்குர்ஆனில் சொல்லாற்றல் மற்றும் விரிவாக்கத்தில் அதற்கு ஈடு எதுவுமில்லை. உதாரணமாக, சூரா ஃபாத்திஹாவின் தற்போதைய (வடிவமைப்பு) தொகுப்பை விட்டு விட்டு மற்றொரு தொகுப்பை மேற்கொண்டால் தற்போதைய தொகுப்பில் அமைந்துள்ள உயரிய பொருளும் மகத்துவமான நோக்கமும் மற்றொரு தொகுப்பில் ஒருபோதும் கூற முடியாது.

எந்த அதிகாரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி; قُلۡ هُوَ اللّٰهُ اَحَدٌ என்ற சூராவையே எடுத்துக் கொள்ளுங்கள். அதில் மென்மையயும், அருளையும் கருத்தில் கொண்டு இறை ஞானத்தையும் உண்மைத் தன்மையையும் கூறப்பட்டுள்ளதோ அதை வேறு யாரும் கூற முடியாது.

இதுவும் திருக்குர்ஆனின் ஒரு தனித்தன்மை ஆகும். ஒரு சில அறிவிலிகள் மகாமாதே ஹரீரீ, ஸப்அ முஅல்லிக்காவிற்கு ஈடு இணையே இல்லை என்று கூறுவதைக் கேட்டு நான் மிகவும் வியப்புக்குள்ளாகின்றேன். மேலும் அவர்கள் இவ்வாறு கூறுவதன் மூலம் திருக்குர்ஆனின் நம்பகத்தன்மையின் மீது தாக்குதல் தொடுக்க விரும்புகின்றனர்.

முதலாவதாக ஹரீரி என்ற புத்தகத்தின் நூலாசிரியர் எங்குமே இதற்கு இணையே இல்லை என்று எங்குமே வாதம் செய்யவில்லை. இரண்டாவது, ஹரீரியின் நூலாசிரியர் சுயமே திருக்குர்ஆனின் அற்புதத்தன்மை (தனித்தன்மை) மற்றும் விரிவாக்கத்தை ஒப்புக் கொள்கிறார். ஆக ஆட்சேபனையாளர்கள் நேர்மையையும், உண்மைத் தன்மையையும் கருத்தில் கொள்வதில்லை. மாறாக, அதை விட்டு விட்டு வார்த்தையின் பக்கம் செல்கின்றார்கள். மேலே குறிப்பிட்ட புத்தகங்கள் உண்மை மற்றும் ஞானத்திலிருந்து விலகி வெற்றிடமாக உள்ளது.

## அற்புதத்தின் சிறப்புத்தன்மை

அற்புதத்தின் சிறப்புத்தன்மை மற்றும் காரணம் எல்லாவற்றின் மீதும் சலுகையைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவதே ஆகும். சொல்லாற்றல் மற்றும் விரிவாக்கத்தையும் விடவில்லை. உண்மைத்துவம் மற்றும் ஞானத்தையும் விடவில்லை. இந்த அற்புதம் திருக்குர்ஆனுக்கு மட்டுமே உள்ளது. அது சூரியனைப் போல் பிரகாசித்து கொண்டிருக்கிறது. எல்லா வகையிலும் தன்னகத்தே அற்புத சக்தியைக் கொண்டுள்ளது.

இன்ஜீலைப் போன்று இவ்வாறு நாவால் மட்டும் கூறவில்லை. அதாவது ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு என்று இப்படிப்பட்ட போதனை ஞானமுள்ள செயலுடன் எதுவரை தொடர்புடையதாக இருக்கும் என்பதையும் மனித இயல்பிற்கு ஏற்ற போதனையா? என்பதையும் கருத்தில் கொள்வதில்லை.

இதற்கு நேர்மாற்றமாக திருக்குர்ஆனின் போதனைகளைப் பார்த்தால் தெரிய வருவது என்னவென்றால், மனிதனின் எண்ணங்கள் எல்லா நிலையிலும் ஆற்றல் பெற்றதாக இருக்க முடியாது. மேலும் திருக்குர்ஆனின் போதனை முழுமையானதும் எவ்வித குறையுமில்லாததுமாக இருக்கிறது. இவ்வுலக அறிவு மற்றும் அறிவின் விளைவாக திருக்குர்ஆன் இருக்கவே முடியாது என புரிய முடியும்.

நம் முன்னால் ஓராயிரம் ஏழைகள் இருக்கின்றார்கள். நாம் அவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் ஏதாவது கொடுத்து விட்டு எஞ்சியுள்ளவர்களைக் கவனத்தில் கொள்ளாமல் விட்டு விடுவது சாத்தியமான ஒன்றா? அவ்வாறே இன்ஜீலும் ஒரே நிலையின் மீது தான் நிற்கின்றது. மீதமுள்ள நிலையை அது கருத்தில் கொள்ளவே இல்லை. நாம் இந்த பழியை இன்ஜீல் மீது செலுத்தவில்லை. ஏனென்றால் இது யூதர்களின் தீய நடத்தைக்கான விளைவே ஆகும். அவர்களுடைய தகுதிக்கேற்ப தான் அவர்களுக்கு இன்ஜீல் கிடைத்துள்ளது. ஆன்மா எப்படியோ போதனையும் அவ்வாறே. இதில் மற்றவரின் தவறு என்ன இருக்க முடியும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 52–53 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

رَبَّنَا اغۡفِرۡ لَنَا ذُنُوۡبَنَا وَاِسۡرَافَنَا فِیۡۤ اَمۡرِنَا وَثَبِّتۡ اَقۡدَامَنَا وَانۡصُرۡنَا عَلَی الۡقَوۡمِ الۡکٰفِرِیۡنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. **(3:148)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad